**இன்று (26.6.2020), மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி K.பழனிசாமி அவர்கள் திருச்சிராப்பள்ளியில் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டி:**

---

அனைத்து ஊடக நண்பர்களுக்கும், பத்திரிகை நண்பர்களுக்கும் முதற்கண் எனது நன்றி கலந்த வணக்கத்தை தெரிவித்துக் கொள்கின்றேன்.

உலகையே உலுக்கி அதிர்ச்சிக்கு உள்ளாக்கியிருக்கின்ற கொடிய கொரோனா வைரஸ் தொற்று நோய் தடுப்பதற்குண்டான நடவடிக்கையை அம்மாவின் அரசு எடுத்து வருகிறது. இன்றைய தினம் திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் கொரோனா வைரஸ் தொற்றுப் பரவலைத் தடுப்பதற்கு மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் குறித்து ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

இந்த ஆலோசனைக் கூட்டத்தில், திருச்சிராப்பள்ளி மாவட்டத்தை பொறுத்தவரை, 24,730 பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதில் 461 பேர் பாதிப்புக்கு உள்ளாகியிருக்கின்றனர். குணமடைந்தவர்களின் எண்ணிக்கை 249 பேர். இறப்பு 4 பேர். திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் தனியார் மற்றும் அரசு சேர்த்து மொத்தம் 2 பரிசோதனை நிலையங்கள் உள்ளன. நாளொன்றுக்கு 850 பேருக்கு பரிசோதனை செய்யப்படுகிறது. கோவிட் சென்டரில் 1,300 படுக்கை வசதிகளைக் கொண்ட மருத்துவமனை உருவாக்கப்பட்டிருக்கின்றது.

தமிழகம் முழுவதும் கொரோனாவால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 70,977, குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 39,999, இறந்தவர்களின் எண்ணிக்கை 911. நேற்றைய தினம் 32,500 பேர் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டிருக்கின்றனர். அதில் 3,509 நபர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். இறப்பு 45 பேர். நேற்றைய தினம் 2036 பேர் குணமடைந்து வீடு திரும்பியிருக்கின்றார்கள்.

கொரோனா வைரஸ் பரவலைத் தடுப்பதற்கு கடுமையான நடவடிக்கைகளை அம்மாவினுடைய அரசு எடுத்து வருகிறது. நோய்ப் பரவலைத் தடுப்பதற்கு மத்திய அரசு ஊரடங்கு உத்தரவை பிறப்பித்தது முதல், அந்த ஊரடங்கு உத்தரவை சரியான முறையில் தமிழ்நாடு அரசு பின்பற்றிய காரணத்தினால் இந்த வைரஸ் தொற்று பரவல்

தடுக்கப்பட்டிருக்கிறது. வளர்ந்த நாடுகளான ஸ்பெயின், இத்தாலி, வல்லரசு நாடுகளான அமெரிக்கா போன்ற நாடுகளில் எல்லாம் இந்த நோய்ப் பரவல் அதிகம் ஏற்பட்டு, அதிக உயிர்சேதம் ஏற்பட்டுள்ளது. மாண்புமிகு அம்மாவின் அரசு எடுத்த சரியான நடவடிக்கையின் காரணமாக பரிசோதனைகள் அதிகப்படுத்தப்பட்டு, குணமடைந்தோரின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது, உயிர்சேதம் குறைந்திருக்கிறது.

உலக சுகாதார அமைப்பு, மத்திய சுகாதாரத் துறை, ஐ.சி.எம்.ஆர். நம்முடைய மருத்துவ வல்லுநர்கள் மற்றும் நிபுணர்கள் தெரிவித்த ஆலோசனைகள், வழிகாட்டுதல்களின்படி, அம்மாவினுடைய அரசு கொரோனா வைரஸை தடுக்கின்ற முயற்சியில் முழு வீச்சில் ஈடுபட்டிருக்கின்றது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோல இந்த ஊரடங்கு காலத்தில் தொழிற்சாலைகள் எல்லாம் மூடப்பட்டிருந்தன. மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களுடன் பலமுறை நடைபெற்ற காணொலிக் காட்சி ஆலோசனைக் கூட்டத்தில், தொழில் நிறுவனங்களுக்குத் தேவையான உதவிகளை வழங்க வேண்டுமென்று கோரிக்கை வைத்தோம். அந்தக் கோரிக்கையின் அடிப்படையில் சுமார் 1,57,098 குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கு 4,145 கோடி ரூபாய் மத்திய அரசிடமிருந்து கடனுதவி கிடைக்கப் பெற்றிருக்கிறது. இதுவரை 24,358 நிறுவனங்களுக்கு, 2,265 கோடி ரூபாய் கடன் பட்டுவாடா செய்யப்பட்டுள்ளது. இந்திய அளவில் 10 விழுக்காடு நிதி ஒதுக்கீட்டை தமிழ்நாடு பெற்றுள்ளது.

திருச்சிராப்பள்ளியைப் பொறுத்தவரை, 6,128 சிறு, குறு மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கு 269.82 கோடி ரூபாய் கடனுதவி வழங்கப்பட்டுள்ளது. மேலும், குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களுக்கு பிணை சொத்தின்றி உடனடி கடன் வழங்குவதற்காக 200 கோடி ரூபாய் நிதி ஒதுக்கி, 125 கோடி ரூபாய் கடனுதவியாக அளிக்கப்பட்டிருக்கிறது. இந்தத் திட்டத்தின் மூலமாக 1064 நபர்கள் பயன் பெற்றிருக்கின்றார்கள்.

இன்றைக்கு தொழில் கூட்டமைப்பைச் சேர்ந்த நிர்வாகிகள் பல்வேறு ஆலோசனைகளை தெரிவித்திருக்கின்றார்கள். அவற்றை அரசு கவனமாக பரிசீலித்து

அவர்களுடைய கோரிக்கையை நிறைவேற்றுவதற்கு அரசு முழு மூச்சில் செயல்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றைக்கு திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் சிப்காட் நிறுவனத்தால் மணப்பாறையில் 1077 ஏக்கர் நிலப்பரப்பில் தொழில் பூங்கா ஒன்று ஆரம்பிக்கப்பட உள்ளது. அதற்காக முதற்கட்டமாக 250 ஏக்கர் நிலப்பரப்பில் ரூ.200 கோடி மதிப்பீட்டில், இந்தப் பணிகள் துவங்க இருக்கின்றது. அதுமட்டுமல்லாமல் சுமார் 150 ஏக்கர் நிலப்பரப்பில் ரூ.100 கோடி மதிப்பீட்டில் நவீன வசதியுடன் கூடிய மிகப்பெரிய உணவுப் பூங்கா ஒன்றும் அங்கேயே அமைக்கப்படும். இதன் வாயிலாக, 15,000 நபர்களுக்கு வேலைவாய்ப்பு உருவாக்கித் தரப்படும் என்பதை இந்த நேரத்தில் தெரிவிக்க விரும்புகின்றேன்.

திருச்சிராப்பள்ளி மாவட்டம், மணப்பாறை வட்டத்தில் செயல்பட்டு வரும் தமிழ்நாடு செய்தித்தாள் மற்றும் காகித நிறுவனத்தின் அடுக்கு காகித அட்டை ஆலை உற்பத்தித் திறனை அதிகரிக்க ஆலை விரிவாக்கத் திட்டம் 2,520 கோடி ரூபாய் மதிப்பீட்டில் இரண்டு கட்டங்களாக செயல்படுத்த திட்டமிடப்பட்டு, என்னால் 1.11.2019 அன்று 1,100 கோடி ரூபாய் மதிப்பீட்டில் முதல்கட்டப் பணிக்கு அடிக்கல் நாட்டப்பட்டது. முதல்கட்டப் பணியில் நாள் ஒன்றுக்கு 400 மெட்ரிக் டன் திறன் கொண்ட வன்மரக்கூழ் தயாரிக்கும் பிரிவு, இரசாயன மீட்பு கொதிகலன் பிரிவு மற்றும் 20 மெகா வாட் திறன் கொண்ட மின் ஆக்கி ஆகியவை நிறுவப்பட்டு ஜனவரி 2021–க்குள் முதல் பணிகள் முடிக்கப்படும். இத்திட்டத்தின் மூலம் கிட்டத்தட்ட 2000 நபர்களுக்கு நேரடி மற்றும் மறைமுகமாக வேலைவாய்ப்பு உருவாக்கித் தரப்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதுமட்டுமல்லாமல், மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் முதலமைச்சராக இருந்த காலத்தில் 2015–ஆம் ஆண்டு உலக முதலீட்டாளர் மாநாட்டை நடத்தி சுமார் 2,42,000 கோடி ரூபாய் முதலீட்டை ஈர்த்தார்கள். அந்த வழியில் மாண்புமிகு அம்மாவின் அரசு, 2019–ஆம் ஆண்டு ஜனவரி மாதம் உலக முதலீட்டாளர் மாநாட்டை சென்னையில் நடத்தி சுமார் 3 லட்சம் கோடி ரூபாய் தொழில் முதலீடுகளை ஈர்த்தோம். அதில் திருச்சி மாவட்டத்தை பொறுத்தவரை, 3,512 கோடி ரூபாய் முதலீட்டில் தொழில் தொடங்க 5 நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்பட்டன. இதன்

மூலம் 6,372 நபர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும் சூழ்நிலையை நாங்கள் உருவாக்கித் தந்திருக்கிறோம்.

கொரோனா வைரஸ் பரவல் இருக்கின்ற இந்த சூழ்நிலையில் கூட தமிழகத்தில் தொழிற்சாலைகள் அதிகமாக உருவாக்க வேண்டுமென்ற அம்மாவினுடைய அரசின் திட்டத்தின் அடிப்படையில், ஜெர்மனி, இங்கிலாந்து, தைவான், பிரான்ஸ், கொரியா, ஜப்பான், சீனா, அமெரிக்கா, ஆஸ்திரேலியா, நெதர்லாந்து ஆகிய நாடுகளைச் சேர்ந்த 17 தொழில் நிறுவனங்களுடன் தொழில் துவங்குவதற்கு புரிந்துணர்வு ஒப்பந்தம் கையொப்பமிடப்பட்டிருக்கிறது. இதன்மூலம் 15,126 கோடி ரூபாய் முதலீட்டை ஈர்த்து 47,150 நபர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கச் செய்ய மாண்புமிகு அம்மாவின் அரசால் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு அம்மாவின் அரசு விவசாயிகளின் நலன் காக்கின்ற அரசாக செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. 9 ஆண்டுகளுக்குப் பிறகு இந்த ஆண்டு டெல்டா மாவட்டங்களிலுள்ள விவசாய பெருங்குடி மக்கள் பயன்பெற வேண்டுமென்பதற்காக, மேட்டூர் அணையிலிருந்து காவேரி ஆற்றில் பாசனத்திற்கு தண்ணீர் திறக்கப்பட்டிருக்கின்றது. அதுமட்டுமல்லாமல் டெல்டா மாவட்டங்களை பாதுகாக்கப்பட்ட வேளாண் மண்டலமாக அறிவித்த அரசு அம்மாவின் அரசு. காவேரி நதிநீர் பிரச்சனைக்கு தீர்வு காணவேண்டுமென்று 50 ஆண்டுகாலமாக டெல்டா மாவட்ட விவசாயிகள் போராடி வந்தார்கள். அந்தப் போராட்டத்திற்கு தீர்வு கண்ட அரசும் அம்மாவின் அரசுதான். நீதிமன்றத்தின் மூலம் காவேரி நதி நீர் பிரச்சனைக்கு நல்ல தீர்ப்பை பெற்றுத் தந்ததும் அம்மாவின் அரசு தான் என்பதை சுட்டிக்காட்ட விழைகின்றேன்.

குடிமராமத்து என்ற அற்புதமான திட்டத்தை மாண்புமிகு அம்மாவினுடைய அரசு ஒரு நீண்டகால திட்டமாக அறிவித்திருக்கிறது. பொதுப்பணித் துறைக்கு சொந்தமாக இருக்கின்ற 24 ஆயிரம் ஏரிகளில் ஒவ்வொரு வருடமும் குறிப்பிட்ட அளவில் ஏரிகளை எடுத்து, அதற்குண்டான நிதி ஒதுக்கீடு செய்து முழுக்க முழுக்க வேளாண் பெருமக்களை வைத்து இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்துகின்றோம். இதுவரை 6,228 பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டு, இதற்காக சுமார் 1,433 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு

செய்யப்பட்டிருக்கின்றது. இந்த ஆண்டிற்கு 1,382 பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டு, அதற்காக 498.5 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

கொள்ளிடம் ஆற்றில், ஆதனூர் குமாரமங்கலத்தில் 495 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிய கதவணை கட்டும் பணி நடைபெற்று வருகின்றது. இதில் 45 சதவிகிதப் பணிகள் நிறைவு பெற்றிருக்கின்றன. கரூர் மாவட்டம், மண்மங்கலம் வட்டம், தஞ்சை புகளூர் கிராமம், காவிரி ஆற்றின் குறுக்கே 405.5 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கதவணை கட்டுவதற்கு அரசாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது என்பதைத் தெரிவிக்க விரும்புகின்றேன்.

Grand Anaicut கால்வாய் சீரமைக்க 2,298.78 கோடி ரூபாய் ஆசிய உட்கட்டமைப்பு வங்கி மூலம் கடன் பெறுவதற்கு மத்திய அரசிடம் அனுமதி கோரப்பட்டுள்ளது. விரைவில் அனுமதி கிடைக்கும், அனுமதி கிடைத்தவுடன் அந்தப் பணிகள் துவங்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோல, உலக வங்கி உதவியுடன் நபார்டு பாசன வேளாண் நவீனப்படுத்தும் திட்டம் 66 உபவடி நிலங்கள் 5.4 கோடி ஹெக்டேர் பாசனப் பரப்பு பயன்படும் வகையில் 2,962 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 4 கட்டங்களாக, 7 ஆண்டுகளில் செயல்படுத்த திட்டமிடப்பட்டு 2017 முதல் பணிகள் நடைபெற்று வருகின்றது. காவேரி டெல்டா பகுதியிலுள்ள 247 ஏரிகள் 38 அணைக்கட்டுகள் மற்றும் 244.38 கிலோ மீட்டர் நீளம் உள்ள கால்வாய்களை சீரமைக்க 287.86 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 90 சதவீதப் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. இரண்டாம் கட்டமாக 230 ஏரிகள், 158 அணைக்கட்டுகள் மற்றும் 31.1 கிலோ மீட்டர் நீளமுள்ள பாசன கால்வாய்கள் சீரமைக்க 240.77 கோடி ரூபாய் மதிப்பீட்டில் செயல்படுத்தத் தொடங்கி, அதில் 25 சதவீதப் பணிகள் முடிக்கப்பட்டிருக்கின்றன.

காவேரி நீர் மேலாண்மை ஆணையம் மற்றும் காவேரி நீர் முறைப்படுத்தும் குழு அமைக்கப்பட்டிருக்கின்றன. 2018–க்கு பின் காவேரி முறைப்படுத்தும் குழுவின் 29 கூட்டங்கள் நடைபெற்றிருக்கின்றன. காவேரி நீர் மேலாண்மை வாரியத்தின் 6 கூட்டங்கள் நடைபெற்றிருக்கின்றன.

முக்கொம்பில் ஏற்கனவே இருந்த பழைய கதவணையில் உடைப்பு ஏற்பட்டது. அதற்கு மாற்றாக, 387.60 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிய கதவணை கட்டப்படும் என்று அறிவிப்பு தந்து, பணி துவங்கப்பட்டு, அதில் 40 சதவீதப் பணிகள் நிறைவு பெற்றிருக்கின்றன. எஞ்சிய பணிகள் விரைவாக முடிக்கப்படும்.

அதுமட்டுமல்லாமல், இன்றைக்கு வரலாற்றுச் சாதனையை அம்மாவின் அரசு படைத்திருக்கின்றது. டெல்டா பகுதியில் விளைந்த நெல்லை அரசு கொள்முதல் நிலையங்கள் மூலமாக இதுவரை 25 லட்சத்து 10 ஆயிரம் மெட்ரிக் டன் கொள்முதல் செய்திருக்கிறோம். இன்னும் 2 லட்சம் மெட்ரிக் டன் நெல் கொள்முதல் செய்ய திட்டமிடப்பட்டிருக்கின்றது. கடந்த காலங்களில் 23 லட்சம் மெட்ரிக் டன்னுக்கு மேல் கொள்முதல் செய்யப்பட்டது கிடையாது. இந்த ஆண்டு தான், சுமார் 27 மெட்ரிக் டன் கொள்முதல் செய்ய நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. இது ஒரு வரலாற்றுச் சாதனை.

அதேபோல் விவசாயிகள் உற்பத்தி செய்கின்ற காய்கறிகள், பழங்கள் வீணாகாமல் பாதுகாக்க வேண்டும் என்பதற்காக அம்மாவின் அரசு 10 மாவட்டங்களில் 482.36 கோடி ரூபாய் மதிப்பீட்டில் விநியோகத் தொடர் மேலாண்மை திட்டத்தின் மூலம் காய்கறி, பழங்களை பாதுகாக்க நடவடிக்கை எடுத்திருக்கின்றது. இந்தத் திட்டத்தின் நோக்கம் ஒருங்கிணைந்த மற்றும் முழுமையான விநியோகம், தொடர் வேளாண்மை உட்கட்டமைப்பை ஏற்படுத்துதல், விவசாய உற்பத்தியாளர்கள், பெரும் சந்தைகள், பதப்படுத்துவோர் மற்றும் நுகர்வோர்கள் சந்தையை ஒருங்கிணைப்பதற்கு உதவுதல், பழங்கள், காய்கறிகள் மற்றும் இதர அழுகும் விளைபொருட்கள் அறுவடைக்குப் பின் ஏற்படும் இழப்பினைக் குறைத்தல், விவசாயிகளுக்கு உரிய விலை கிடைக்கச் செய்தல், இதர முதலீட்டாளர்களை விநியோகத் தொடரில் பங்கு பெறச் செய்தல், இத்திட்டத்தினை விவசாயிகளுக்கு விரிவுபடுத்தி நன்மை விளைவிக்கச் செய்தல் ஆகும். இத்திட்டத்தின் மூலமாக இவ்வளவு வசதிகளை விவசாயிகள் பெறுகின்றார்கள்.

மாண்புமிகு அம்மாவின் அரசு சுய உதவிக்குழுக்களுக்கு பல்வேறு உதவிகளை செய்து வருகின்றது. தமிழ்நாட்டில் மொத்த சுய உதவிக் குழுக்களின் எண்ணிக்கை 6.96 லட்சம் ஆகும். இதில் 103 லட்சம் உறுப்பினர்கள் இடம் பெற்றிருக்கிறார்கள். இதில்

திருச்சியில் மட்டும் 11,055 குழுக்கள் இருக்கின்றன. இந்தக் குழுக்களுக்கு எல்லாம் அம்மாவினுடைய அரசால் தேவையான மானியமும் கடன் உதவிகளும் வழங்கப்பட்டு வருகிறது. 2019–20ஆம் ஆண்டில் 12,500 கோடி ரூபாய் இலக்கு நிர்ணயிக்கப்பட்டு, திருச்சியில் மட்டும் 400 கோடி ரூபாய் வழங்கப்பட்டிருக்கிறது. அதேபோல 2020–21ஆம் ஆண்டிற்கு 14 ஆயிரம் கோடி ரூபாய் கொடுப்பதற்காக திட்டமிடப்பட்டு, திருச்சிக்கு 400 கோடி ரூபாய் வழங்கியிருக்கின்றோம். இந்த கோவிட்–19 காலத்தில், சுயஉதவிக் குழுக்களுக்கு தேவையான உதவிகளை வழங்க வேண்டும் என்பதற்காக தமிழ்நாடு முழுவதும் ரூபாய் 315 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு திருச்சியில் 10 கோடி ரூபாய் சுய உதவிக் குழுக்களுக்கு கடன் உதவி கிடைப்பதற்கு அரசு வழிவகை செய்திருக்கிறது.

**கேள்வி: ஜுன் 30–க்கு பிறகும் ஊரடங்கு உத்தரவு நீட்டிக்கப்படுமா ?**

**பதில்:** வரும் திங்கட்கிழமை மருத்துவ வல்லுநர்கள் குழுக் கூட்டம் நடக்க இருக்கிறது. ஏற்கனவே மாவட்ட ஆட்சித் தலைவர்களுடனான கூட்டம் காணொலிக் காட்சி மூலமாக நடைபெற்று பல்வேறு ஆலோசனைகள் வழங்கப்பட்டது. அதையொட்டி, வருகிற திங்கட்கிழமை காலை 10 மணிக்கு தலைமைச் செயலகத்தில், மருத்துவ வல்லுநர் குழு கூட்டம் நடைபெற இருக்கிறது. அக்கூட்டத்தில் மருத்துவ வல்லுநர்கள் தெரிவிக்கின்ற கருத்துக்கள் மற்றும் மத்திய அரசின் அறிவிப்புகளை பொறுத்துதான் முடிவு செய்யப்படும்.

**கேள்வி: குடிமராமத்து பணிகள் வரவேற்றத்தக்க விஷயமாக இருந்தாலும், சில இடங்களில் அப்பணிகள் சரியாக நடக்கவில்லை என்று விவசாயப் பிரதிநிதிகள் சொல்கிறார்களே ?**

**பதில்:** முழுக்க, முழுக்க வேளாண் பெருமக்களின் பங்களிப்போடு தான் குடிமராமத்து திட்டம் நடைபெறுகிறது. கொரோனா தொற்று காரணமாக தான் காலதாமதம் ஏற்பட்டுள்ளது. இருந்தாலும் குறித்த காலத்தில் அந்தப் பணிகளை முடிக்க வேண்டுமென்று அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கும், பொதுப்பணித் துறையைச் சேர்ந்த அதிகாரிகளுக்கும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

**கேள்வி:** கூட்டுறவு வங்கிகள் RBI control–ல் செல்வது குறித்து ...

**பதில்:** கூட்டுறவு வங்கிகளை RBI–யின் கட்டுப்பாட்டில் கொண்டு வருவதாகச் சொல்லியிருக்கிறார்கள். முழு விவரங்கள் கிடைத்தால் தான் அதைப்பற்றி கூற முடியும். ஏற்கனவே உள்ளது போல் தொடர்ந்து செயல்படுத்த வேண்டும் என்று மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களுக்கும் சம்பந்தப்பட்ட துறையின் மத்திய அமைச்சர் அவர்களுக்கும் கடிதம் எழுதியுள்ளோம்.

**கேள்வி: விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் வழங்குவது குறித்து ...**

**பதில்:** அது தொடர்ந்து கொண்டுதான் இருக்கிறது. அதில் எந்தவித பிரச்சனையும் வரவில்லை. அவர்கள், அவர்களுடைய கருத்தைச் சொல்லி இருக்கிறார்கள். அதைப்போல் நாமும் நம்முடைய கருத்தைச் சொல்லி இருக்கிறோம். மாண்புமிகு அம்மாவின் அரசு விவசாயிகளுக்கு தொடர்ந்து இலவச மின்சாரத்தை வழங்கும். இதில் வேறு எந்த மாறுபட்ட கருத்தும் கிடையாது.

**கேள்வி: எம்.ஜி.ஆர். மருத்துவ பல்கலைக்கழக ஆய்வுக் குழு செப்டம்பரில் தான் கொரோனா வைரஸ் தொற்றின் முதல் அலையே வரும் என்று சொல்லியிருக்கிறார்களே..**

**பதில்:** உலக சுகாதார அமைப்பு, மத்திய சுகாதாரத்துறை, ஐ.சி.எம்.ஆர்., மருத்துவ நிபுணர்கள் என ஒவ்வொருவரும் ஒவ்வொரு கருத்தை தெரிவிக்கின்றார்கள். இது ஒரு புதிய நோய் என்பதால் குறிப்பிட்ட காலத்திற்குள் அதை தடுக்க முடியும் என்று யாரும் அறுதியிட்டு சொல்ல முடியவில்லை.

**கேள்வி: கொரோனாவால் தமிழகமே ஸ்தம்பித்து இருக்கிறதே ? இந்த சூழ்நிலையில் அனைத்துக் கட்சிக் கூட்டம் வாய்ப்பு இருக்கிறதா ?**

**பதில்:** இந்தத் தொற்றினால் தமிழகம் மட்டுமல்ல, உலகமே ஸ்தம்பித்துள்ளது. இது முழுக்க முழுக்க மருத்துவத் துறையைச் சார்ந்த பணியாகும். மருத்துவ நிபுணர்கள், மருத்துவ வல்லுநர்கள், உலக சுகாதார அமைப்பு, மத்திய சுகாதாரத்துறை, ஐ.சி.எம்.ஆர்., ஆகியோர் தெரிவிக்கின்ற கருத்துக்களின் அடிப்படையில் தான் நாங்கள் செயல்படுகின்றோம். அரசியல் கட்சிகள் ஒவ்வொன்றையும் கேட்டு செயல்படுத்தக் கூடியது அல்ல. இது முழுக்க

முழுக்க மருத்துவத் துறையைச் சார்ந்தது. இந்த நோய்க்கு மருந்து கண்டுபிடித்தால் தான் இதை ஒழிக்க முடியும் என்கிறார்கள். அதுவரை உலக சுகாதார அமைப்பு, மத்திய சுகாதாரத்துறை, ஐ.சி.எம்.ஆர்., மருத்துவ நிபுணர்கள் தெரிவித்தது போல் வெளியில் சென்றால் கண்டிப்பாக முகக்கவசம் அணிய வேண்டும், பொருட்களை வாங்கும்போது சமூக இடைவெளியை கடைப்பிடிக்க வேண்டும், வெளியில் சென்று வீடு திரும்பும் பொழுது கை கால்களை நன்றாக சோப்பு போட்டு கழுவ வேண்டும், கழிப்பறை மற்றும் வீட்டை சுத்தமாக வைத்துக் கொள்ள வேண்டும். ஏதாவது நோய் அறிகுறி தென்பட்டால், உடனடியாக மருத்துவமனைக்குச் சென்று பரிசோதனை செய்து பாதிக்கப்பட்டிருந்தால் சிகிச்சை பெற்றுக் கொள்ள வேண்டும். இந்த நோயிலிருந்து பாதுகாத்துக்கொள்ள தெரிவித்துள்ள வழிமுறைகளை கடைப்பிடித்து நடக்கவேண்டும்.

**கேள்வி: கடைமடைப் பகுதிக்கு தண்ணீர் செல்லும் அளவிற்கு மேட்டூர் அணையில் இருந்து அதிகமான தண்ணீர் திறந்துவிடப்படுமா ?**

**பதில்:** ஒவ்வொரு முறையும் பொதுப்பணித்துறை அதிகாரிகள் தேவையான அளவு தண்ணீரை கணக்கிட்டுத்தான் தண்ணீர் திறந்து விடுகிறார்கள். கடைமடைப் பகுதிகளுக்கு தேவைப்படும் அளவு தண்ணீரை கணக்கிட்டு படிப்படியாக திறந்து விட்டுக் கொண்டிருக்கிறார்கள். முழுவதுமாக தண்ணீரைத் திறந்து விட்டாலும் அது பயனற்றுப் போய்விடும். விவசாயிகளும் நாற்று நடுதல் போன்ற பணிகளை படிப்படியாகத்தான் செய்வார்கள். அதற்கேற்றவாறு தண்ணீர் திறந்து விடப்படும். காலம் காலமாக தண்ணீர் திறந்து விடப்படும் அடிப்படையில்தான் இந்த ஆண்டும் பொதுப்பணித்துறை அதிகாரிகள் தண்ணீர் திறந்து விட்டுக் கொண்டிருக்கிறார்கள். 100 அடி இருந்த காரணத்தினால்தான் தண்ணீர் திறந்து விட்டு இருக்கின்றோம். நிச்சயமாக நல்ல மழை பொழியும் என்று நாம் கருதுகிறோம். அதேபோல் நமக்கு கிடைக்கவேண்டிய நீரைப் பெற்றுத் தருவதற்கு ஏற்கனவே காவேரி நீர் முறைப்படுத்தும் குழு அமைக்கப்பட்டுள்ளது. அந்தக் குழுவின் மூலமாக, காவேரி மேலாண்மை ஆணையத்தின் மூலமாக வலியுறுத்தி நமக்குத் தேவையான தண்ணீரை பெறுவதற்கான நடவடிக்கையை நாங்கள் மேற்கொள்வோம்.

நிச்சயமாக வருண பகவான் நமக்கு கருணை காட்டுவார், தேவையான மழை பொழியும், விவசாயிகளுக்குத் தேவையான நீர் வழங்கப்படும்.

**கேள்வி: கொரோனா காலத்தில் பள்ளிகளில் கல்விக் கட்டணத்தை செலுத்த சொல்லி வலியுறுத்துவதாக புகார் வருகிறது. இந்த ஆண்டு கல்விக் கட்டணத்தில் சலுகை வழங்குவதற்கு வாய்ப்பு இருக்கிறதா ?**

**பதில்:** இதுவரை அதுபோன்ற கோரிக்கை வரவில்லை. அரசைப் பொறுத்தவரை கடந்த இரண்டு மாத காலமாக எந்தவித வருமானமும் இல்லை. தொழிற்சாலைகளும், கடைகளும் இயங்காததால் வருமான இழப்பு ஏற்பட்டுள்ளது. இதனால் மாதம் சுமார் 13,000 முதல் 14,000 கோடி ரூபாய் வரை வருவாய் இழப்பு ஏற்படுவதனால் வருடத்திற்கு சுமார் 85 ஆயிரம் கோடி வருவாய் பற்றாக்குறை ஏற்படும் என்று நம்முடைய நிதித்துறை செயலாளர் அவர்கள் தெரிவித்திருக்கின்றார்கள். இதையெல்லாம் கருத்தில் கொண்டு எந்தஅளவுக்கு மக்களுக்கு உதவி செய்ய முடியுமோ அந்த அளவிக்கு அரசு உதவி செய்யும்.

---